**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**DVC.No.14/2019**

**Deposition of DW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஞானவேல் | **Age** | : | 63/2026 |
| **Father's Name** | : | திரு. சொக்கலிங்கம் | **Religion** | : | இந்து |
| **Village** | : | சின்னாளபட்டி | **Calling** | : | வியாபாரம் |
| **Taluk** | : | ஆத்தூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27/08/2026.**
மனுதாரர் ஆஜரில்லை. 4-ம் எதிர்மனுதார் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

1) நான் சின்னாளபட்டியில் வசித்து ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். பாலாஜியின் குடும்பத்தினரை எனக்கு 30 ஆண்டுகளாக தெரியும். பாலாஜிக்கு பெண் பார்த்து பூ வைப்பதற்காக போடிநாயக்கனூருக்கு என்னை அழைத்திருந்தார்கள். நான் ஜாதி நாட்டாமையாக இருந்ததால் என்னை அழைத்தார்கள். நான் பூ வைக்கும் விசேஷத்தில் நான் முன்னிருந்து எல்லா வேலைகளும் செய்தேன். நகை நட்டு எவ்வளவு போடுகிறீர்கள் என பேசியபோது அவர்கள் பேசிக் கொள்வதாக சொல்லிவிட்டார்கள்.

2) அதன் பிறகு நான் என்னை அழைத்துச் சென்ற மாப்பிள்ளை வீட்டாரிடம் அது குறித்து கேட்டபோது பெண்ணுக்கு 25 பவுன் நகையும், மாப்பிள்ளைக்கு 5 பவுன் நகையும் போடுவதாக என்னிடம் சொன்னார்கள். அதன்பிறகு சின்னாளப்பட்டியில் திருமணம் நடந்தது. அங்கு நிச்சயதார்த்தத்திற்கும், திருமணத்திற்கும் என்னை அழைத்து இருந்தார்கள். மாப்பிள்ளை வீட்டார் சொன்ன நகைகளை திருமணத்திற்கு போட்டு வந்திருந்தார்கள்.

3) அதன்பிறகு வளைகாப்பு நடந்ததாக சொன்னார்கள். சின்னாளப்பட்டி பெருமாள் கோவிலில் வைத்து வளைகாப்பு நடந்தது. அந்த விசேஷத்திற்கு, அந்த பெண் திருமணத்தின் போது அணிந்திருந்த நகைகளை போட்டு வந்திருந்தார். எங்கள் ஜாதி வழக்கப்படி வளைகாப்பு நடந்தால் அங்கு இருந்து பெண்ணை அவர்களது வீட்டிற்கு அழைத்துச் சென்று விட வேண்டும். அந்த நகைகளை போட்டுக் கொண்டுதான் அவர் போடிக்குச் சென்றார். ஏழாவது மாதம் வளைகாப்பு நடந்தது பிப்ரவரி மாதம் 14 ஆம் தேதி பெண் குழந்தை பிறந்தது.

4) அதன் பிறகு சுமார் ஒன்றரை முதல் இரண்டு ஆண்டுகள் கழித்து போலீஸ் இன்ஸ்பெக்டர் பாலாஜியின் வீட்டிற்கு விசாரிக்க வந்துள்ளதாக என்னை அழைத்தார்கள். போடியில் இருந்து இன்ஸ்பெக்டர் வந்திருந்ததாக சொன்னார்கள். போலீசார் என்னை பாலாஜி வீட்டினர் பெண்ணை கொடுமைப்படுத்தினார்களா என்று விசாரித்தார்கள். எனக்கு பாலாஜி குடும்பத்தாரை 30 ஆண்டுகளாக தெரியும் என்றும், அவர்கள் அவ்வாறு கொடுமைப்படுத்தவில்லை என்றும் சொன்னேன்.

5) அதன்பிறகு நகைகளை பாலாஜி வீட்டார் வாங்கி வைத்துக் கொண்டதாக போலீசார் என்னிடம் சொன்னார். நான் போலீசாரிடம் வளைகாப்பு முடிந்த இடத்திலிருந்து பெண் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார் என்றும், எனவே அந்த நகைகளை வாங்கி வைத்துக் கொள்ள வாய்ப்பு இல்லை என்றும் சொன்னேன்.

( மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது) .

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.08.27 17:09:52 +0530

**Judicial Magistrate,**

**Bodinayakanur.**